1148

1148/1957

OFFICE OF THE REGISTRAR ... MADRAS
7 - MAR 1957


# முல்லைக் கொடி

சான்றாண்மை இதழ் - குருகுலத் தாள்

கிழமைப் பதிப்பு] [வெள்ளிக் கிழமையில்

ஆசிரியர்: இளவழகனார்

| கிளை | துன்முகி, மார்கழி 21௨. | தளிர் |
|---|---|---|
| 9 | 4-1-'57 | 12 |

9-ம் ஆண்டுக்கையொப்பம்
(14-10-56 முதல்)

| | | |
|---|---|---|
| உள்நாடு | ரூ. | 4 0 0 |
| வெளி நாடு | ரூ. | 6 0 0 |
| தனித் தாள் | ரூ. | 0 1 0 |
| ஆயுள் - கையொப்பம் | ரூ. | 100 0 0 |

முகவரி:

குருகுலம்,
மதுராந்தகம் (அஞ்.);
செங்கற்பட்டு மாவட்டம்:
தமிழ்நாடு.


## திருப்புகழ் விழா மலர்

### 'மறை' என்ற பெயர்க் காரணம்

விலங்கினங்களுள் மிக்க சிறப்பினை யுடையது கற்பகதரு என்று, விலங்கினத்தையும்மரங்களையும்ஒப்புமையாக நினைத்துக் கணக்கிடுவது வழக்காறன்று. தம்முள் ஒத்த சாதிக்குள்ளாகத்தான் உயர்வும் இழிவும் ஒப்புமை கண்டு கணக்கிடுதல் இன்று வழக்கில் உள்ளது. கற்பனை கடந்த கடவுளே! நின்னைத் தேவருள் முதல்வனென்று போற்றுவேம். தேவசாதியோ உயிர்க்கென அமைத்த எழுவகைப் பிறப்பினுள் ஒன்று. பிறப்பில்லாத வேற்றுச் சாதிப் பொருளாகிய நின்னைப் பிறப்பினையுடைய தேவசாதி உயிர்களுள் முதல்வனெனக் கருதுமாறு மறைகள் உரைத்தது எக் கருத்தினைப் பற்றியெனப் பல முறை ஆராயினும், உண்மைப் பொருள் அறிதல் அரிதாக வுள்ளது. யாமெல்லாம் தேவரில் நீயும் ஒருவன் என மயங்குமாறு நின் நிலையை நீயே மறைத்துக் கூறியுள்ளது ஆகையினால், அதனை உணர்த்த அறிஞர் வேதத்துக்கு 'மறை' என்னும் பெயரை நன்கு நிறுத்தினர் போலும்.

—குமர குருபர அடிகள்

"என் கடன் பணி செய்து கிடப்பதே"



"யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா"
—புறநானூறு.


# முல்லைக் கொடி

| கிளை 9 | துன்முகி, மார்கழி 4-1-57 | தளிர் 12 |
|---|---|---|


## இந்தூர்க் காங்கிரஸ் மாநாடு

சென்னை ஆவடிப் பெருவெளியில் 1955ம் ஆண்டில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டுப் பெருவிழா தமிழகம் மறக்க முடியாத தொன்று. கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தாகத் திகழ்ந்த பேரழகும் பெருஞ் சிறப்பும் வாய்ந்த மாநாட்டு அமைப்பும் ஏற்பாடுகளும் நம்மவர் உள்ளங்களில் நிலையான பெருவாழ்வு பெற்றுவிட்டன.

அத்தகைய 'காங்கிரஸ் பெருங் கூட்டம்' இன்று இந்தூரில் நடைபெறுகின்றது. ஆவடி கண்ட அழகுசால் அமைப்புக்கள் இன்று இந்தூர் மாநாட்டில் இனிது காணப்படுகின்றன.

ஜான்ஸி அரசி இலக்குமிபாய் 1857 ஆண்டில் நடந்த உரிமைப் போரில் பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்துப் போரிட்ட வீர தீர மாட்சிமையை நினைவு கூர்விக்கும் வகையில் இந்தூர் மகாநாடு நிகழும் இடம், 'இலக்குமிபாய் நகரம்' என்று பெரிடப் பெற்றுள்ளது. உரிமைப்போர் நடந்து 100 ஆண்டுகள் ஆவதால் நூற்றாண்டு விழாவாக இவ்வாண்டைப் பெருமைப் படுத்த 1957 அலங்கார வாயில்கள் மாநாட்டுக்கு மக்கள் வரும் வழிகளில் அமைக்கப் பெற்றுள்ளன. இது 62 வது மாநாடு என்பதனை அரங்கத்தின் முகப்பு வாயில் 62 அடி உயரமாக நின்று விளக்குகின்றது.

தேர்தலுக்குப் பலம் திரட்டுவது மாநாட்டின் நோக்கமன்று எனவும் நாட்டில் புதிய இனிய சமுதாய அமைப்பினை ஏற்படுத்தவழிவகைகள் காண்பதே நோக்க மென்றும் காங்கிரஸ் தலைவர் திரு. தேபர் மாநாட்டுச் செயற்குழுவினர் கூட்டத்திற் கூறியுள்ளார்.

மாநாட்டுச் சார்பில் நடைபெற்ற மத்திய பஞ்சாயத்துச் சம்மேளனத்தில் இந்திய முதலமைச்சர் திரு. ஜவஹர்லால் நேரு அவர்கள் கிராமங்களின் முதன்மையை வற்புறுத்தினார். கிராமங்களில் இன்றுவேரூன்றி இருக்கும் சாதி சமய உயர்வு தாழ்வுகள். வகுப்பு வாதங்கள், பிரிவினைக் கிளர்ச்சிகள், பொதுவுடமைக் கொள்கைகள் ஆகிய அனைத்தும் அடியோடு மறையப் பஞ்சாயத்துத் தலைவர்கள் பாடுபட வேண்டும் என்றும், அப்போதுதான் கிராமங்களில் துன்பம் மறைந்து பொருளாதாரச் சீர்திருத்தம் திகழும்என்றுகூறினார். ஆங்கிலேயர் ஆட்சியில் படிப்படியாகத் தேய்ந்து மறைந்த கிராமக்கைத் தொழில்கள் குடிசைத் தொழில்களை மீண்டும் புத்துயிர் கொடுத்து வளர்த்தால் தான் நாட்டில் செழிப்பு நிலவும் என்றும், பஞ்சாயத்துக்கள் செய்யும் இவற்றுக்கான முயற்சிகளில் ஆட்சி பெரிதும் உதவும்என்றும் உறுதி கூறினார். தீண்டாமை போன்றவைகளைச் சட்டங்களால் மட்டும் போக்க முடியாது. மக்கள் உள்ளத்தில் உயர்வு தாழ்வு மறையத்தகுந்த நிலைமையைத்தலைவர்கள் தாம் அமைக்க வேண்டும் என்றும் கூறினார்.

குறிப்பிட்ட இந்தக் கிராமத்தைச்சார்ந்தவர் என்பதும்மறந்து நாம் இந்திய மக்கள் என்ற நல்லுணர்ச்சி மக்கள் உள்ளத்தில் இடம் பெறும்படி கிராமப் பஞ்சாயத்துத் தலைவர்கள் செய்தல் வேண்டும் என்றும் ஒவ்வொரு பஞ்சாயத்திலும் இந்தியாவின் படமொன்று அமைத்து மக்களுக்கு அவர்கள் வாழும் கிராமங்கள் இந்தியாவின்பகுதிகள் என்ற எண்ணம் உண்டாக்க வேண்டும் என்றும் கூறினார்.

தேர்தலில் காங்கிரஸ் கண்ணியமாக நடந்து கொள்ள வேண்டும் என்றும், பிற கட்சியினர்களுக்குப் போட்டியாகத் தாமும் மக்கள் உள்ளத்தில் வீண் ஆசைகள் கனவுகளை உண்டாக்குவதை அடியோடு ஒழிக்கும்படியும் தம் நேர்மையும் பொறுப்புமே தமக்குத் துணைசெய்யத் தேர்தலில் இறங்க வேண்டும் என்றும் கூறினார்.

'ஆட்சி, என்பது ஒரு படகு. அது நன்றாக வலுவாக இருத்தல் வேண்டும், முழுகினால் அதிற் செல்லும் அனைவரும் முழுக நேரும். அது நன்றாக இருந்தால் அனைவரும் நன்றாக இருக்கலாம்' என்று அவர் கூறியது சிந்திக்கத் தகுந்தது. இந்தூர் மாநாடு இந்தியச் செழுமைக்கு உண்மையான வழிகள் பலகோலும் என்று நாடு எதிர்ப் பார்க்கிறது.

சி. து. க.

# குருபழநியில் திருப்புகழ்விழா

31–12–56 அன்று குரு பழநியில் (மாம்பாக்கம் குருகுலத்தில்) திருப்புகழ் விழா இனிது நடைபெற்றது அவ்வமையம்சென்னை இறைபணி மன்றத் திருக் கூட்டத்தினர்,சென்னையில் இருந்து காலை 5 மணிக்குப் புறப்பட்டுத் திருவான்மியூர், திருப்போரூர், திருக் கழுக்குன்றம் ஆகிய தலங்களில் வழிபாடாற்றிவிட்டு மாலை 1–30 மணிக்கு வந்து விழாவிற் கலந்து கொண்டனர்.

குருபழநியில் காலையிலேயே விழா ஆரம்பமாயிற்று. 6-மணிக்கு ஆசிரியர் திரு. இளவழகனார் அவர்கள் திருமுன்னிலையில் குருபழநி ஆண்டவருக்குத் திரு முழுக்காட்டலும், திரு நீற்றுக்காப்பும் நடைபெற்ற பிறகு குருகுல சென்னைக்கிளைநிலைய மாணவர்களால் திருமுருகாற்றுப்படை ஓதப்பட்டது.

இறைபணி மன்றத்தார் மாலை 1 மணிக்கு மதுராந்தகம் பஸ் நிலையம் வந்து சேர்ந்தனர். அவ்வமையம் மதுராந்தகம் திருவெண்காட்டீசுவரர் கோயில் நிர்வாகிகள் அவர்களை வரவேற்று இயங்களின்ஒலியுடன் கோயிலுக்கு அழைத்துச் சென்றனர். திருவெண்காட்டீசுவரர் வழிபாடு முடிந்து, அடியவர்கள் மீண்டும்பஸ்ஸில் புறப்பட்டு 1-30 மணிக்குக் குருகுலம் வந்தடைந்தனர்.

அவர்களைக் குருகுல மாதர் திருக் கூட்டச் செயலாளர் திருமதி நாகம்மையார் அவர்கள், திருவிளக்குடன் பஸ் அடியில் வரவேற்றனர். பின்பு குருகுல வாயில் முகப்பில் பாடசாலைச் சாரண இயக்கத்தினர் வரவேற்று விழா மண்டபத்திற்கு அழைத்துச்சென்றனர். அவ்வமையம் சென்னை இறை பணி மன்றத் திருக் கூட்டத்தினருடன் பெங்களூர் தவநெறிப் பாராயணத் தேவார திருப்புகழ்ச் சபையினரும் கலந்து கொண்டனர். அனைவரும் குருபழநி ஆண்டவனை வழிபாடு செய்து அவன் பேரருளைப் பெற்றனர். இறைபணி மன்றத் திருக்கூட்டத்தினரால் திருப்புகழ்ப் பஜனை நடைபெற்றது.

விழாவிற்குப் பெங்களூர் 'சிவம் அண்டு கம்பெனி' உரிமையாளர் உயர்திரு. பரமசிவம் அவர்கள் தலைமை தாங்கினர். சென்னை டாக்டர் மணி அவர்கள் குருகுலக் கொடியை ஏற்றுவித்துக் குருபழநியாண்டவர் கோயில் அமைக்க வேண்டிய வழிமுறைகளைப் பற்றி விரிவாகப் பேசினர். அடுத்தபடியாகக்கலைமகள் ஆசிரியர் திரு. கி. வா. ஜகன்னாதய்யர் திருப்புகழ் ஆராய்ச்சிச் சொற்பொழி வாற்றினர். (இதன் சாராம்சம் மற்றொரு பக்கத்தில் வெளியிடப் பட்டுள்ளது.)

அதன் பின்னர் ஆசிரியர் திரு. இளவழகனார் அவர்கள், திருப்புகழ் ஆராய்ச்சி நூல் ஒன்று வெளியிட்டுக் "குருபழநி"என்பதுபற்றிச் சொற்பொழி வாற்றினர். சொற் பொழிவில் அவர் "தென்பழநி என்பது திருவாவினன் குடி. அது, குருபழநிக்குத் தெற்கே இருக்கிறது. வட பழநி குருபழநிக்குவடக்கே இருக்கிறது. இதற்கு இடையிலேதான் குருபழநி யிருப்பதாகத் திருப்புகழ்கூறுகிறது.அது எவ்விடம் என ஆராயுங்கால் மாம்பாக்கம் குருகுலமே என்று காண்கிறோம். அதைப் பற்றிய ஆராய்ச்சி நூல் இன்று வெளியிடப் பெறுகிறது." என்று கூறினர். மேலும் அவர், அருணகிரி நாதர், 'முருகன் குமரன் குகன் என்று மொழிந்து உருகும் செயல் தந்து உனதாள் அருள்வாய்' என்று நிரலே மொழிந்துள்ளதை ஆராயுங்கால், குருபழநித் திருப்புகழில் அருட்கவியின் வாக்குப்படி முருக கோட்டம் என்று பாராட்டப் பெறும் இத் தலத்தில் முதன் முதல் வழிபாடு தொடங்கிச் செல்லுதல் முறையும் பொருத்தமும் ஆம் என்றும் அடுத்த ஆண்டிலிருந்து திருத்தணிப் பயணத்தை இங்கிருந்தே தொடங்குதல் நலமாகும் என்றும் குறிப்பிட்டார்.

இவ்வகையில். முதலில் குருபழநி யாண்டவரான இளமுருகனைக் கண்டு,

(6-ம் பக்கம் பார்க்க)

**பணிப் பகுதி – உணர்வு வலிமைக்கு**

# குருகுலத்தில் திருப்புகழ் விழா

### 31–12–56 அன்றுமாம்பாக்கம் குருகுலத்தில் நடைபெற்ற திருப்புகழ் விழாவின்போது, கலைமகள் ஆசிரியர், உயர்திரு. கி. வா. ஜகன்னாதய்யர்

அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் சாரம்

வரங் கொண்ட உமை முலைப்பால்
மணங் கொண்ட செவ்வாயும்
பரங் கொண்ட களிமயிலும்
பன்னிரண்டு கண்மலரும்
சிரங்கொண்ட மறை இறைஞ்சுஞ்
சேவடியும் செந்தூரன்
கரங்கொண்ட வேலு மென்றன்
கண்ணைவிட்டு நீங்காவே

நல்ல சூழ்நிலையில் திருப்புகழ் விழா நடைபெறுவது கண்டு மகிழ்கின்றேன். 1956ம் ஆண்டு, இத்தகைய விழா நடைபெறச் செய்துவிட்டு இன்று நம்மிடம் விடைபெற்றுக் கொள்கின்றது. ஆசிரியர் இளவழகனார் இயற்கை களிநடம் புரியும் இடமாக இக் குருகுலச் சூழலை அமைத்துள்ளனர் சென்னை அடியார்பலர் முயற்சியால், இக் குருபழநியின் பெருமை மிகுதிப்படுகிறது. திருப்புகழ் கலக்கும் இடங்களில் ஆண்டவன் கலப்பது உறுதி. திருப்புகழ் விழாவினால். இவ்விடத்தைப் பின்னும் தூய்மைப்படுத்தித் தெய்வ மணங் கமழச் செய்து இறைவனைப் பிரதிட்டை செய்யும் இச் செயல் போற்றத் தக்கது.

இறைவன் இல்லாத இடம் உலகில் இல்லை. பார்க்கும் இடம் எங்குமொரு நீக்கமற நிறைந்த பரிபூரணப் பரப்பிரம்மமாய் ஆண்டவன் எங்கும் நிறைந்துள்ளான் ஆண்டவன் எங்கும் நிறைந்திருந்தாலும் அவனுக்கென்று கோயில்கள் உள்ளன. அவன் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள இடம் தேடி அடியார் வழிபடச் செல்கின்றார்கள். ஆண்டவனைப் பற்றி எண்ணம் தோன்றும் இடம் எல்லாம் கோயில்களே.

ஆரவாரம் மிகுந்த உலகில் மக்கள் பலவேறு தொழில்களில் ஈடுபடுகின்றனர். அவர்களின் மன மொழி மெய்கள் வெவ்வேறு தொழில்களில் ஈடுபடுவதால் அழுத்தமாக அவர்கள் ஆண்டவனை நினைக்க முடிவதில்லை அம்மா அடுப்படியில் பக்ஷணங்கள் செய்யும் போது குழந்தைகள் எதிரில் அமர்ந்து படிப்பில் கவனம் செலுத்தமாட்டார்கள். அவர்கள் படித்தாலும் கவனம் பக்ஷணங்கள் பேரில்தான் செல்லும். அங்ஙனமே, படிக்கும் அறையில் வேறுசெயல்களில் ஈடுபட்டாலும் சிந்தனை படிப்பில்தான் ஊறி நிற்கும். இவற்றால், சூழ்நிலையை ஒட்டியே செயல்கள் உருவாதல் விளக்கமாகிறது. ஆகவே, ஆண்டவனையே நினைவு கூர்விக்கும் சூழ்நிலையை உண்டாக்கவே திருக்கோயில்கள் அமைந்துள்ளன. திருக்கோயில்களில் மனிதர்களுடைய மன மொழி மெய்கள் தூய்மையடைந்து ஆண்டவன் மயமாகின்றன. ஐம்பொறிகளும் இறைவனிடம் பக்தியை வளர்க்கத் துணைபுரிகின்றன.

ஐவாய் வழிச் செல்லும் அவாவினால் நாம் கெடுகிறோம் அவைகள் போக்கில் செல்லவிடாமல் அடக்கித் தவத்துறையில் ஈடுபட்டுப் பெரியோர் பலர் சித்தி பெற்றார்கள். ஆனால், அம்முயற்சி எல்லார்க்கும் எளிதன்று. உலக நடவடிக்கைகளில் பெரிதும் ஈடுபட்டுள்ள நம் போன்றவர்க்கு பக்தித் துறைதான் சாலச் சிறந்தது. பக்தியே சித்தியாக அடைந்து மகிழ்ந்த பெரியோர் பலர்.

ஐம்பொறிகளும் தத்தம் போக்கில் போய்க் கெட்டுவிடாமல் அடக்கி ஒரு முகப்படுத்தி ஆண்டவன் அருட்பணியில் செலுத்த வேண்டும் மனம், பொறிகள் வசமானால் திருவருளை எய்தமுடியாது ஓட்டைக் குடத்தில் எத்தனை தரம் நீர் நிரப்பினாலும் குறைந்து கொண்டேதான் இருக்கும். ஓட்டைக்குடத்தை ஓட்டை அடைக்காமல் அதேநேரத்தில் நீரும்குறையாமற் செய்ய ஒரு வழி உண்டு அக்குடத்தை நீர் நிரம்பிய குளத்தில் போட்டுவிடலாம். குடத்தில் நீர்குறையாது. நிறைந்தது நிறைந்தபடி இருக்கும் மெய்மனமொழிகளையும் இங்ஙனமே ஆண்டவன் பேரருளில் திளைக்கச் செய்ய வேண்டும் மணிவாசகப் பெருமான்,

சிந்தனை நின்றனக்காக்கி
நாயினேன்றன்
கண்ணிணைநின் திருப்பாதப்
போதுக் காக்கி
வந்தனையு மம்மலர்க்கே
யாக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கியைம்
புலன்களார
வந்தனையாட் கொண்டுள்ளே
புகுந்த விச்சை
மாலமுதப் பெருங்கடலே
மலையே யுன்னைத்
தந்தனைசெந் தாமரைக்கா
டனைய மேனித்
தனிச்சுடரே யிரண்டுமிலித்
தனிய னேற்கே

என்ற பாடலில் தாம் இறைவன் திருவருளில் இரண்டறக் கலந்து நின்ற மாட்சிமையைத் தெரிவிக்கின்றார். இவ்வழியில் இந்திரிய நிக்ரஹம் செய்து மணிவாசகப் பெருமான் அறிவாற் சிவனேயாக வாழ்ந்தார்.

அத்தகைய அருள் வழியில் வந்தவர் அருணகிரிநாதர். ஆண்டவன் திருவருளைப் பெற பக்தி வழியே சாலச் சிறந்ததென்று அருணகிரியார் திருப்புகழ்

1 அந்நிலை யடைந்த வன்ப
னரற்றினன் பெரிது நொந்தான்
மன்னிய பாச நெஞ்சின்
மயக்கம தலைப்ப மாழ்கித்
தன்னிலை பைய வோர்ந்து
தவப்பெருஞ் சார்பு நச்சி
முன்னைபோன் மனைவி யோடு
முயன்றவண் நடக்கின் றானால்.

102 வழிதனைக் காட்ட நம்பின்
வந்திடு கள்வன் பின்போய்ப்
பழிபடு முள்ளத் தோடும்
பயின்றுநற் றலைவன் றன்னை
வழிபடு வான்போற் சென்று
வாள்கொடு வீசி யன்னான்
அழிவிலா வில்லிற் கொள்ளை
யடிப்பதா வெண்ணி வந்தான்.

103 நச்சுளக் கொடிய னெண்ணம்
நாமறிந் திண்டே யன்னான்
இச்சையு முடியும் வண்ணம்
இருங்கடன் மானத் தோன்றும்
அச்சம தாற்று மாற்றில்
ஆழ்த்தின மிறந்தா னன்னான்
இச்செயல் யாவு மெண்ணி
யியன்மன மமைதி யன்றே.

104 இவ்வண முலகிற் காணும்
எண்ணிலா வுயிர்கட் கெல்லாஞ்
செவ்வணந் தக்க பெற்றி
சேர்த்துவ மறிக வென்று



78 நீர்கடந் தேகவே
நிலைத்த பாலமொன்
றேர்பெற விருக்குமவ்
வியல்பை யோர்ந்தனர்
தீர்விலாச் சிந்தைநோய்
தீர மூவரும்
சீருடன் அதன்மிசைச்
சேற லுற்றனர்.

79 நடந்தனர் செல்லுவோர்
நடுவெ னும்பதம்
அடைந்தன ரவ்வழி
யடுத்த மைந்தனுங்
கொடுந்தகை யானவண்
கூடு நண்பனை
நெடுந்திரை யாற்றிடை
நெட்டித் தள்ளினான்.

80 ஐயகோ வெனவவ
னலறி வீழவச்
செய்கையால் முனிவனுஞ்
சினந்து வெம்பினான்
மையலா யென்செய்தாய்
மதியிலா யெனாப்
பொய்யிலான் பற்பல
புலந்து கூறினான்.

81 அவ்விரா வுணவளித்
தன்பு பூண்டவன்
செவ்விய மனையினிற்
சேரு மொண்கலம்

கவ்வினை யெடுத்தனை
கரவு பூண்டனை
செய்வினை தீமையே
செய்வ தோர்கிலாய்.

82 பின்னரக் கலத்தினைப்
பிறழு நெஞ்சுடன்
பொன்னினைக் காவல்செய்
பூத மன்னவக்
கன்மனத் தாணிலிற்
காண வைத்தனை
என்னினைந் திச்செய
லியற்றி னாய்கொலாம்!

83 விடர்களும் வேய்களும்
விளங்கு கானெறி
இடர்தரு மாலையில்
இயங்கு வேளையில்
படரெலாந் தவிர்ந்திடப்
பழகு மன்புடன்
கடமையிற் காத்தவன்
கருணை யோர்கிலாய்

84 பசியினைப் பையவே
பரிந்த கற்றிய
கசிவுடை நெஞ்சகக்
கருணை வள்ளறன்
வசையிலாக் குழவிதன்
வாழ்வை மாயமாய்ப்
பசையிலாய் ஒழித்தனை
பாவ மெண்ணிலை.



குறுகிய நோக்கங் கொண்டோன்
கொள்கையி னிலைய றிந்தேம்
சிறுபொலங் கலத்தை நாமே
சிறியவ னில்லில் வைத்தேம்.

98 நாமவண் கரந்த பின்னர்
நலமிலா னங்குக் கண்ட
சேமநற் கலத்தா லன்னான்
சிந்தையுந் திரிந்து மாறித்
தீமையில் ஈகை யென்னுஞ்
செழும்பொருண் மாட்சி யெண்ணித்
தேமன விருந்து நோக்கித்
தேடியாண் டலைகின் றானால்.

99 அடுத்துநாங் கண்ட பொற்பின்
அருளுடை நெஞ்ச மேலோன்
தொடுத்துநம் மிடத்து மாறாத்
தொழும்புபூண் டொழுகுஞ் சீரோன்
எடுத்தவிப் பிறவி நோயை
யீடறக் கழிக்க நின்றான்
மடுத்தநம் அருளை யன்னான்
வாய்த்தனன் பெரிது மன்றே.

100 இன்னவா றமைந்து நின்றும்
ஈடிலான் குழவி வாய்த்த
பின்னெமை மறந்தான் தன்சீர்ப்
பெருமையுந் தவமு நீத்தான்
மன்னிய பாச நெஞ்சின்
மயக்கெலாம் போக்கி யாள
யுன்னியச் செயல்பு ரிந்தேம்
உறுபவச் செயல்க டிந்தேம்.

பெய்கழன் மைந்தனைப்
பெயர்ந்து வந்துனை
வைகிய வழியிடை
வாய்ந்து கூடினேம்.

வேறு

95 முதலில்நாங் கண்ட வந்த
மொய்த்தநற் செல்வன் றானும்
விதமுற வடிசி லாக்கி
விருப்புட னளித்தா னேனும்
பதமுறத் தனக்கு வாய்த்த
பகரொணாச் செல்வந் தன்னால்
குதுகல மடைந்த வன்னான்
கொள்கையி னிலைய றிந்தேம்.

96 ஆகவே யவன்ற னில்லில்
அரியவக் கலனைக் கொண்டேம்
போகவே கண்ட பின்னர்
புதுமதி யுடைய னாகிப்
பாகமாய்த் தனக்கு வாய்ந்த
பைம்பொனாற் பெருமை காட்டா
தேகமா மின்ப நல்கு
மீகையிற் சிந்தை வைத்தான்.

97 பிறகுநாங் கண்ட வந்த
பிறங்கிய செல்வம் பெற்றான்
இறுகிய வுள்ளங் கொண்டோ
னெண்ணியங் கொருவற் கீயான்



85 ஆங்கது போகவிங்
கடைந்து நந்தமைத்
தீங்கிலா வழிதனிற்
செலுத்து மன்பினான்
சாம்படி யாற்றினிற்
றள்ளி வீழ்த்தினாய்
பாங்கிலா நெறிசெலும்
பாவி நீயென்றான்.

வேறு

86 என்றே பலவும்
எழின்மாமுனி யெண்ணியெண்ணிக்
குன்றாத வண்ணம்
பலகூறலும் கோலமைந்தன்
நன்றாம் நிலையை
நனிகேட்டனன் போனகைத்து
நின்றே மறைந்தான்
நினைவோன்றிகைப் பெய்திநிற்க.

87 மைந்தன் மறைய
மதிமேலவன் மையலார்ந்த
சிந்தை குழம்பித்
திகைத்தான்செயல் வேறுகாணான்
சந்தம் புனையுந்
தடந்தோளவன் றன்மைதன்னில்
உந்தும் மறையோன்
றாளதென்றவ னுள்ளமோர்ந்தான்.

88 தள்ளாத செய்கைத்
தனியைம்புலத் தொல்லைதள்ளி
எள்ளா துயர்ந்த
வெழின்மாதவ னின்னலெய்தி
யுள்ளாவி சோர
வுணர்வற்றவன் வீழவொண்கேழ்
விள்ளாவொர் சோதி
வியன்மாநில மேவிற்றன்றே.

89 ஈரேழ் புவன
மினிதீந்திடு மெங்களன்னை
சீரார் பசுமைச்
செழுமாமயில் சேர்ந்தகோலத்
தாரா வமுதா
வடியாருள மேவுமையன்
பேரா வுளத்துப்
பெரியான்முனம் பேணிநின்றான்.

**வேறு**

90 எல்லொளி மழுங்கிட
வெறிக்கு நீள்சுடர்
மல்லலஞ் சுடரடி
வள்ளல் மாதவச்
செல்வன்முன் தோன்றலுஞ்
சிந்தை நைந்திடத்
தொல்லையாண் டுழந்தவன்
றொழுதெ ழுந்தனன்.



91 அன்னையு மப்பனு
மாகு மண்ணலே
முன்னவர் தமக்கெலா
முன்ன வாசும்
பொன்னவீர் பாதியாய்
புலவருய்ந் திட
வின்னமிர் தீந்திடு
மேழை பங்கனே.

92 ஆடிமேற் காற்றினி
லலையும் பஞ்சென
வாடினேன் திகைத்துள
மருட்சி யெய்தினேன்
ஆடகச் சீரடி
யண்ண லேதுயர்
வீடிட வருள்செய
வேண்டு மென்றனன்.

93 புன்றொழி லடியனேன்
புன்மை போக்கியே
யின்றெனைக் காத்தியென்
றேத்து மாதவன்
றன்றுயர் ஒழிந்திடத்
தண்ணி லாச்சடைக்
குன்றவில் வானவன்
கூற லுற்றனன்.

94 செய்தவச் செல்வனின்
சிந்தை மேவிய
உய்தலில் ஐயத்தை
யொழித்தல் வேண்டியே

சமயப் பகுதி அருள் – வலிமைக்கு (முன் தொடர்ச்சி)

# அறநிலைய அலுவலர் கையேடு

(கோவை கிழார்)

திருப்பணி செய்பவர்களின் உரிமை கடமைகள் விரிக்கப்பட வேண்டும். அலுவலாளர்களுக்கும் பணியாளர்களுக்குமுள்ள தொடர்புகள் விளக்கப்பட வேண்டும். பொது மக்கள் எம்மட்டும் உரிமைகள் கடமைகள் செய்யலாம் என்பதும் கூற வேண்டும். இந்த நிலையங்கள் பொது மக்களுக்காகவே ஏற்பட்டபடியால் அவர்களின் பொது நலம் சிறப்பாகப் போற்றப்பட வேண்டும். சைவ வைணவக் கோயில்களில் உள்ள வேறுபாடுகள், தொழுகைகளிலும் அமைப்பிலும் உள்ளவைகள் பண்டைச் சிறப்புக் குன்றாமல் தற்காலப் பண்பாட்டிற்கு இழிவு வராமல் பாதுகாக்கப் பெற வேண்டும். இந்த வகையில் நன் மதிப்புப் பெறும்படியாக அலுவலாளர்கள் நடந்து கொண்டு மேற்பார்வையில் அக்கறையோடு கடமை செலுத்தினால், நிலையங்கள் மக்களுக்கு மிகவும் பயன்படும். இல்லாவிடில், நிலையங்களால் மக்களுக்கு யாதொரு பயனும் இல்லாமல் போய்விடும். அதனாலே அலுவலாளர்கள் தங்கள் கடமை செலுத்தியவர்கள் ஆக மாட்டார்கள்.

நூலில் 3 பிரிவுகளும் இவ்வாறாக இருக்கையில் பின் சேர்க்கைகளாகச் சில விவரங்கள் கொடுக்கப்படலாம். தமிழ் நாட்டில் உள்ள கோயில்களின் புள்ளி விவரங்கள் சிலவற்றைக் கொடுக்கலாம். கோயில்களின் எண், வருமானம், கோயில்களைச் சிறப்பிக்க வேண்டிய செயல்கள், பொது மக்களிடம் பெறக் கூடிய நன்கொடை வசதிகள், பொது மக்களுக்குப் போதிக்கக் கூடிய சமயச் சேவைகள், சமயக் கல்விப்பரப்பு முதலியவைகளும் சேர்க்கப்படலாம். இவை முதலான விவரங்களை இக்கையேடு கொண்டிருந்தால் சமுதாயத்தின் ஒவ்வொரு பகுதியினரும் தெளிவடைந்து அறநிலையங்களை மிக மேன்மையுடன் போற்றுவார்கள் என்பதில் ஐயமில்லை.

அரசியலில் மற்றப் பகுதியினர் தங்கள் செயல்களை வினைப்படுத்தும் போது அறநிலையத்தார் மட்டும் இன்னும் மூலைகளில் ஒதுங்கிக் கிடத்தல் செம்மையன்று. ஆகவே தற்போதைய தலைவர் தொடங்கியிருக்கும் முயற்சியில் அறிஞர்கள் நெஞ்சார உதவி புரிவார்களாக!

(முற்றும்)

---

வாயிலாகத் தெளிவுபடுத்துகின்றார். 'அன்பேசிவம்' என்ற திருமூலர் கருத்தினையும் அருணகிரியார் பாடல்களிற் காணலாம். அவர் பக்தியே சித்தியாகக் காட்டினார்.

பக்தி முதிர்ந்தால் உலக இன்பங்கள் அனைத்தும் தாமாகக் கசந்துபோம். 'கூடும் ஒண்கழல் கும்பிடலே அன்றி வீடும் வேண்டாத' மெய்யன்பு ஆட்சி புரியும். அத்தகைய நிலையில் இடம் காலம் அனைத்தையும் வெல்லுதல் எளிதாகும்.

அருணகிரியார்தம் திருப்புகழ் இத்தகைய பக்திநெறியில் நம்மை ஈடுபடுத்த வல்லது. வாக்குக்கு அருணகிரி. கருணைக்கு அருணகிரி என்னும் தொடர்கள் அவர்தம் பெருமையைப்புகலும். பேரருட் செல்வரான அருணகிரியார் 16000 சந்தப் பாடல்களால் எம்பெருமான் முருகனைப் பரவியுள்ளார். மலையருவி சலசலவென்று இழிவது போலத் திருப்புகழ்ப் பாடல்கள் அருணகிரியார் வாக்கினின்று வெளிவந்து உலகில் அருளைப் பரப்புகின்றன

அருணகிரியார் சமரச நோக்குடையவர். எம்பெருமான் முருகனைப் பரவும் வகையாகப் பல தெய்வங்களையும் பாராட்டுவார். முருகனைக், கண்ணன் மருகனே! என்பார், கம்பன் பாராட்டாத அளவுக்கு இராமபிரானைப் பாடிப் புகழ்வார் இராமபிரானைக் கோசலை கூறுவது போல 'எந்தைவருக!, ரகுநாயக வருக'! என்றெல்லாம் அழைத்து மகிழ்வார். திருமயிலைச் செல்வி

(7-ம்பக்கம் பார்க்க)

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பின், காஞ்சிக் குமரனை வழிபட்டு அதன்பின்னர் கழுக்குன்றத்துக் குகப் பெருமானை வழிபட்டுச் செல்லுதல் சாலச் சிறந்த தென்ருர்.

அடுத்துக் 'குருகுலப்பாடசாலை மாணவர்களால் குருகுலம் என்ருல் என்ன? குருகுலத்தின் குறிகோள் யாது?என்பன பற்றிச் சிறியதும்சிறந்ததுமானதொரு உரையாடல் நடைபெற்றது.

இதற்கிடையில் இறைமணி மன்றத்தாரில் திரு. அருணசலம் செட்டியார், திரு. வேணுகோபால் நாயுடு. திரு. இராமய்யர் ஆகிய மூவரும் குருகுலப் பாடசாலைப் பகுதியில் உள்ள தோட்டங்களைப் பார்வையிட்டுத்தோட்டக் கலையில் திறமை மிக்க ஆசிரியர்களுக்கு முறையே பரிசுகள் வழங்கினர்.பரிசுகளை மதுராந்தகம் வட்டக் கல்விக் கண்காணிப்பாளர் திரு வி. சுப்பிரமணியம் அவர்கள் வழங்கினுர். இவ்விழாவில் மதுராந்தகம் வட்டார அபிவிருத்தி அதிகாரி அவர்களும், செங்கற்பட்டுமாவட்டக்கால்நடை இலாக்கா அதிகாரி அவர்களும்கு பங்கொண்டனர். விழாவின் முடிவில் கீழ்க் கண்ட தீர்மானங்கள்நிறைவேற்றப் பட்டன.

1 ஒவ்வோராண்டும் டிசம்பர் மாதம் 31உ குருபழநியில் திருப்புகழ் விழா கொண்டாடுதல் வேண்டும்.

2 மாம்பாக்கம் குருகுலத்தார் இவ்விழாவில் பங்கெடுத்துக் கொள்ள வேண்டும்.

3 குருபழநி ஆண்டவர், கோயில் கட்டிடத்திற்காக நிதி திரட்ட வேண்டும்.

4 டிசம்பர் 31உ திருப்புகழ் விழாவில் தக்க ஆசிரியரைககொண்டு நான்கணுவிலை அளவில் திருப்புகழ் ஆராய்ச்சி நூல் ஒன்று ஆண்டுக்கொருவர் பொருளுதவியுடன் ஆண்டுதோறும் வெளியிட வேண்டும்.

5 விற்பனையில் கிடைக்கும் தொகையைக் குருபழநி ஆண்டவர்கோயில்கட்டிட நிதிக்குச் சேமிக்க வேண்டும்.

6 இறைபணி மன்றத்தார் டிசம்பர் மாதக் கடைசியே அன்றி மற்ருெரு முறை குருபழநிக்கு யாத்திரையாக வந்து சிறப்பு விழாவொன்றுநடத்துதல் வேணடும்.

குருபழநிக்கு குழுவினராகக்கீழ்க்கண்டஉறுப்பினர்களை விழாவின் போதே தீர்மானிக்கப் பட்டது.

திரு, முத்துசாமி ஐயர் அவர்கள்
,, டாக்டர் மணி ,,
,, கருப்பண்ண முதலியார் ,,
,, வேணுகோபால் நாயுடு ,,
,, சுந்தரம் ,,
,, பரமசிவ முதலியார்,,

தீர்மானத்திற்குப் பின் அனைவருக்கும் சிற்றுண்டி வழங்கப்பட்டு விழா இனிது முடிந்தது. இறைபணி மன்றத்தார் இனிது விடைபெற்றுத் திருத்தணிகைக்குப் புறப்பட்டனர்.

இவ்விழாவில் பங்கு கொண்டு சிறப்பித்த பெருமக்கள் அனைவருக்கும் நன்றி.

துணைவர், குருகுலம்,

* * * *

---

மணித் திரள்

உண்மையான் நோக்கவல்லார்க்குப் பவணந்தி முதலாயினுர் அறிவுடையாரால் பெரிதும்பாராட்டுதற்குரிய சீர்ப்பாடுடையரல்லர்.

---

Phone: 55034 Tel. Enkaya

கைத்தறி ஆடைகளில்
சிறந்தது எங்கள் எலிபெண்ட்
கிசான் டிரேட் மார்க்

பட்டாடைகளுக்கும்
நூலாடைகளுக்கும்
சிறந்த இடம்

கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்.
53. கிடங்குத் தெரு.. சென்னை 1.

## மொழிப் பகுதி — அறிவு வலிமைக்கு

# சேரவாரீர்!

(முத்து வடிவேல்)

பூத்தது! பூத்தது! பொற்கதிர் — எனப்
பொங்கி மலர்மரை போலவே
பூத்தது! மக்களின் உள்ளமும் — இன்பம்
பொங்கி மலர்ந்த தருளினல்
முல்லை வெளியில் முகிழ்த்திடு — மெங்கள்
மோனக் குருகுலம் கண்டுமே!
எல்லை யிலாப்பணி செய்குவம் — என
யாவரும் முன்வந்து நிற்கிருர்.
"தொண்டுளம் கொண்டவர் யார்க்குமே—இந்தத்
தூய குருகுலம் வாயிலாம்,
மண்டி யிவண்பணி யாற்றுவோம் — விரி
மன்பதைத் தொண்டுகள் போற்றுவோம்!
மாணவ மாணவி மார்களோ — டுயர்
மல்லல் செயல்பல; நற்குறள்
காணும் வகையினில்" என்றுமே—குரு
காட்டும் வழியினில் செய்குவோம்.
முல்லை மலர்ந்த ததன் மணம் — தமிழ்
மூலைக ளெங்கும் கமழ்ந்தது!
கொல்லை வெளியில் குருகுலம் — உயர்
கோபுரம் போல் உயர் கின்றது.
செந்தமிழ் நாட்டுயர் செல்வரே — அங்குச்
சென்றதைக் கண்டு மகிழுங்கள்;
நந்தமிழ் நாட்டில் அதுவொரு — கலை
நர்த்தன மாடுமிட மன்ருே?
வள்ளுவன் ஈந்த குறள்முறைச் — செயல்
வாழச் செயல் உரு வாக்குவார்
உள்ள குறளதி காரங்கள் — அவை
ஒன்றும் விடார் செயல் போற்றுவார்
வாருங்கள்! வாருங்கள்! வாருங்கள்! — அங்கே
வந்ததைக் கண்டு மகிழுங்கள்!
சேருங்கள்! சேருங்கள்! சேருங்கள்! — ஒன்ருய்ச்
சேர்ந்து பணிசெய வாருங்கள்.

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

பராசக்தி மகனே! என்று ஷண்முகநாதனைப்பாடுவார். நாம் காமத் துன்பங்களில் கலங்கி வாடுவதை யெல்லாம் தம்மேல் ஏறட்டுக்கொண்டு துன்பம்ஒழிக்கும்படி முருகனை வேண்டுவார்.

கருப்பங்கழியை இயந்திரத்தி விட்டு ஆட்டும் போதுபல பாகங்களில் பிழியப்பட்டு ஈற்றில் சாருக இயந்திரத்தின் மூக்கின் வழி வருதல் போலத் திருப்புகழ் ஆலயில் பக்திச் சுவை பலவகையில்பிழியப்பட்டு ஈற்றில் முருக பக்தியாக வெளிப்படுகிறது. ஷண்முக நாதனிடம் அருணகிரியார் கொண்ட பக்தி நித்திய மானது. அந்தப் பக்தி 16000 அருட்பாடல்களின் மூலம்வெளி வந்து அருளாட்சிபுரிந்தது: இப்போது உலவுவன ஆயிரத்துச் சொச்சம் பாடல்களே! இத்துணைப் பாடல்ளும் பக்தியாற் பாடியவை. வெறும் புலமையாற்பாடியவையல்ல. ஒரு பாடலை அமைக்க இலக்கண அமைதி எவ்வளவு கவனிக்க வேண்டியிருக்கிறது!

தணிகைமணி திரு. வ. சு. செங்கல்வராய பிள்ளையவர்கள், தம் குடும்பச் சொத்துப் போன்ற திருப்புகழை ஆராய்வதிலேயே தம் முழுநேரத்தையும் செலவிட்டு வருகிருர். ஆராய்ச்சி வன்மை வாய்ந்த நல்ல பெரும் புலவரான இளவழகனுர் அருணகிரியார்பெரும் புகழை உலகுக்கு விளக்க இத்தகைய விழாக்கள் நடத்துகின்ருர்.

அக்காலத்தில் பக்தர் புலவராக இருந்தனர். இக்காலத்திவ் 'புலவர்கள் பக்தரா?' என்ற எண்ணம் ஏனே உலவி வருகின்றது!

எம்பெருமான் முருகன் தமிழ்ச் சங்கத்துத் தலைமைப் புலவனுக இருந்தவன். செந்நாப் புலவரான நக்கீரனுக்கு, இலக்கணம் அருள் புரிந்தவன். அப்பெருமான் திருப்புகழை நினைவு கூரச்செய்யும் இப் பெருவிழாவில்கலந்துகொண்டுஏதோ சிறிது நேரம் பேச அப்பெருமான் அருளால் எனக்குப் பாக்கியம் கிடைத்தது. திருப்புகழ்ப் பாடல்களை அனைவரும் ஓதிப் பக்தி நெறியில் ஈடுபட்டு உய்வோமாக! இவ்விழாவில், பேச இடந்தந்த நம் அனைவர்க்கும் நன்றி.

* * * *

## குருகுலச் செய்தி:

திருவதிகையில் குருகுலச் செல்வியார் திருமதி ஜெயலட்சுமி அம்மையார் நோன்பில் 30—12—56ல், குருகுலத்தில் மாங்கன்றுகள் நடுவதற்குகாகக் கீழ்க் கண்டவர்களிடமிருந்து நன் கொடை வரவு விபரம்.

| | |
|---|---|
| திருமதி ஜெயலட்சுமியம்மையார் | 2—0—0 |
| திரு பொ. த. முனுசாமி அவர்கள் | 2—0—0 |
| திரு பி. வி. குப்புசாமி அவர்கள் | 2—0—0 |
| திருமதி. கஜலட்சுமி அம்மையார் | 1—0—0 |
| திரு. ம. பாலசுப்பிரமணியம் அவர்கள் | 1—0—0 |
| ஆகமொத்தம் வரவு ரூ. | 9—0—0 |

சென்னை அடியார் திருக்கூட்ட இறைபணி மன்றம் ஐந்தாம் ஆண்டு திருப்புகழ்த் தலவழிபாட்டின் போது குருகுலத்தில், திருப்புகழ் விழாவில் (31-12-56) குருபழநி ஆண்டவர் கோயில் கட்டிட நிதிக்காக நன்கொடை வரவு ரூ 78-10-0

குருபழநி புத்தகம் (ஆசிரியர் சிரு. இளவழகனுர் அவர்களின் ஆராய்ச்சிக் குறிப்புகள் வெளியீட்டு விற்பனை மூலம் வரவு ரூ. 28-8-0

31-12-56 குருகுலத்தில் நடை பெற்ற திருப்புகழ்விழாவின் போது, சென்னையிலிருந்து வந்திருந்த அடியார் திருக் கூட்டத்தினரில்,

புரொபகர் திரு. சி. எ. சுப்பிரமணியம், மதருஸ் இன்ஸ்டிடுயூட் ஆப் டெக்னலஜி, குரோம் பேட்டை, சென்னை அவர்கள், மாணவர் இல்லத்தில்உணவு கொள்ளும் ஏழைச் சிறுவன் ஒருவன் செலவுக்கு மாதம் பத்துரூபா விகிதம் ஒருவருடம் வரை, ஜனவரி 57 முதல் அனுப்புவதாகத் தெரிவித்துள்ளார்கள்.

திரு. ஏ. சுகவன நாதன், கிருபாகர் பேப்பர் மார்ட்,
!-வது அக்ராகரம், சேலம்

ஏழை பிள்ளைகட்கு 1 குரோஸ் 40 பக்கம் நோட்புக் தருவதாக ஒப்புக் கொண்டிருக்கிருர்கள்.

# திருவெம்பாவை - - திருப்பள்ளியெழுச்சி விரிவுரைகள்

**(5-12-56 முதல் 3-1-57வரை — மார்கழி முப்பது நாளும் நாடோறும் காலை 7-30 இருந்து 8-30 மணி வரையில்)**

விரிவுரையாளர்: "சைவப் பெரும்பேராசிரியர்"
**சிவத்திரு. இளவழகனுர் அவர்கள்**

இடம்: சென்னை வேங்கடாசல முதலி தெரு
**ஸ்ரீ பிரசந்ந விநாயகர் மண்டபம்**

அன்பர்கள் தூய்மையும் உருக்கமுங் கொண்டு தொடர்ந்து செவிமடுத்துத் திருவருளில் திளைப்புறுக!

அய்யா. சுப்பிரமணிய முதலியார்
(ஆதீனப் பரம்பரை அறங்காவலர்)

## ஆசிரியர் விரிவுரைகள்:

(நடக்க இப்பன)

சென்னை:

13-1-57 ஞாயிற்றுக் கிழமை மாலை 6-00 மணிக்குச் சென்னை, சென்னமல்லிகேஸ்வரர்கோயிலில், 'பெரிய புராணம்'

14-1-57 திங்கட் கிழமை மாலை 6-00 மணிக்குச் சென்னை, தொண்டை மண்டலப் பள்ளியில், 'சிவஞான சித்தியார்'

* * * *

## முக்கிய அறிவிப்பு

குருகுலத்தில் அதிகாரச்செய்கை ஏற்பு வகையில், திருக்குறள் பொருட்பால், இரவச்சம் அதிகாரத்தினைக்,குருகுலத்துணைவர் திருகோ. உலகநாதன் அவர்கள் ஏற்றுக் கொண்டு. குருகுலக் கைத்தொழில் நிலையம் என்ற ஒரு அமைப்பைத் தொடங்கி யிருக்கிருர்கள். அந்தத் துறையில் தற்போது குருகுலப் பற்பொடி செய்து வருகிருர்கள். குருகுலப் பற்பொடி குருகுல இல்லத்திலுள்ள மாணவர்களாலேயே செய்யப்பெறுகிறது. இதன் ஆக்கம் ஏழைப்பிள்ளைகளுக்கே சேர்வதால் இதனை ஆதரிப்பது குருகுலத்தைச் சார்ந்த ஒவ்வொருவருடைய கடமையாகும்.

குருகுலப்பற்பொடி உயர்தரமானது. பல் கூச்சம், சீழ்வருதல், பல் தேய்வு, செந்நீர் வருதல் பல் ஆட்டம், வாய்நாற்றம், மற்றும் பல் தொடர்பான எல்லாவகை நோய்களையும் போக்கி, ஈறுகளைத் தூய்மையாக வைத்துக் கொள்ள உதவும்.

தமிழ் மருத்துவ முறைப்படி அரிய மூலிகைகள், வேர்வகைகள் சேர்த்துக் காலத்திற் கேற்றவாறு நுட்ப முறையில் செய்யப் பெற்றது. ஒரு பை விலை 1-அணு, மொத்தமாக வேண்டுவோர் விவரங்கட்கு, கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதுக:

**கோ. உலகநாதன்,**
செய்கையாளர்,
**குருகுலகைத்தொழில்நிலையம்,**
மதுராந்தகம் (அஞ்சல்).
செங்கற்பட்டு மாவட்டம்.

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்: தி. சு. பாலசுந்தரம்,
குருகுல அச்சகம், மதுராந்தகம் (அஞ்சல்); செங்கற்பட்டு மாவட்டம்: தமிழ்நாடு.